| | | |
|---|---|---|
| வகுப்பு : X | மாதிரி காலாண்டுத் தேர்வு | மதிப்பெண்கள் : 100 |
| பாடம் : தமிழ் முதல் தாள் | செய்யுள், உரைநடை | காலம் : 2.30 |

## பகுதி - I

**மதிப்பெண்கள் : 14**

**பலவுள் தெரிக** **14x1=14**

1. முத்தமிழ் துய்ப்பதால் - என்னும் பாடலின் பா வகை --------------
   அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) நேரிசை வெண்பா
   இ) இன்னிசை வெண்பா ஈ) இன்னிசை சிந்தியல் வெண்பா
2. உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படுவது
   அ) தேவதுந்துபி ஆ) சிங்கி இ) டோலக் ஈ) தப்பு
3. சிறுபுன் என்பதன் பொருள் --------
   அ) அகன்ற ஆ) விரிந்த இ) பரந்த ஈ) உயர்ந்த
4. ‘காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணிப்பேசி மகிழ் நிலை வேண்டும்’ என்று கூறியவர் யார்?
   அ) குலோத்துங்கன் ஆ) பராந்தகன் இ) இராஜராஜன் ஈ) இராஜேந்திரன்
5. அதிவீரராமபாண்டியரின் பட்டப்பெயர்
   அ) சீவலபேரி பாண்டி ஆ) சீவலமாறன் இ) மாறவர்மன் ஈ) மாறன்வழுதி
6. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
7. ‘விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல’ – எனப் பாடியவர்
   அ) மாணிக்கவாசகர் ஆ) கீரந்தையார் இ) ஓதலாந்தையார் ஈ) அம்மூவனார்
8. முந்நீர் என்ற சொல்லின் பொருள் ----------
   அ) கடல் ஆ) ஆறு இ) நதி ஈ) ஏரி
9. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------- இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ----
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (10,11,12,13,14) விடைதருக.**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

10. மேலுள்ள பாடலடிகள் இடம் பெற்ற நூல் எது?
    அ) பெருமாள் திருமொழி ஆ) காசிக்காண்டம் இ) பரிபாடல் ஈ) மலைபடுகடாம்

11. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கீரந்தையார் ஆ) குலசேகராழ்வார் இ) தமிழழகனார் ஈ) பரஞ்சோதி முனிவர்
12. இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.
அ) வாளால், மாளாத ஆ) வாளால், அறுத்து இ) மீளாத, காதல் ஈ) ஆளா அடியேனே
13. மாளாத - என்பதன் பொருள் யாது?
அ) தீராத ஆ) முடியாத இ) கூறாத ஈ) இயலாத
14. பிரித்து எழுதுக - உனதருள்
அ) உன+அருள் ஆ) உனது+அருள் இ) உ+அருள் ஈ) உனக்கு+அருள்

## பகுதி - II
## மதிப்பெண்கள் : 20
## பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 5x2=10**

15. பூவின் வெவ்வேறு நிலைகளைக் குறிப்பிடும் தமிழ்ச்சொற்களாகப் பாவாணர் குறிப்பிடுவன யாவை?
16. அமிலமழை எப்படி உருவாகின்றது?
17. விருந்து பற்றி எடுத்துரைக்கும் தமிழ்நூல்கள் யாவை?
18. ‘வேர்டுஸ்மித்’ குறிப்பு வரைக
19. மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைய வேண்டும்?
20. விடைகளுக்கேற்ற வினா அமைக்க
அ) மொழிஞாயிறு என்று அழைக்கப்படுபவர் பாவாணர்.
ஆ) உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான்.
21. ‘பறை’ குறிப்பு வரைக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 5x2=10**
**(28வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)**

22. தமிழ்மொழியின் சிறப்பினை எடுத்தியம்பும் நூல்களாய்ப் பெருஞ்சித்திரனார் குறிப்பிடும் நூல்கள் யாவை?
23. காற்றிடம் எதனைக் கொண்டுவந்து கொடுக்குமாறு பாரதியார் வேண்டுகிறார்?
24. அதிவீரராமபாண்டியர் குறிப்பு வரைக.
25. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
26. செய்குதம்பிப் பாவலர் ஏன் சதாவதானி என்று போற்றப்படுகிறார்?
27. உறங்குகின்ற கும்பகன்ன, ‘எழுந்திராய் எழுந்திராய்’
காலதூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
28. குற்றம் - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

SRI KRISHNA ACADEMY

## பகுதி - III

## மதிப்பெண்கள் : 50

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** 3x5=15

29. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
30. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து எழுதுக.
31. செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில் நுட்ப வரையறையைக் கூறி விளக்குக.
32. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
33. மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதால் விளையும் பயன்களைப் பட்டியலிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** **3x5=15**

34. தமிழன்னையை வாழ்த்துவற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
35. பெருமழை பொழிகின்ற விதம் குறித்து எழுதுக
36. “மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்

    உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
37. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
38. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **4x5=20**

39. **பொருத்துக.**

| | |
|---|---|
| (i) பாவலரேறு | அ. செய்குதம்பிப் பாவலர் |
| (ii) சிந்துக்குத்தந்தை | ஆ. கம்பர் |
| (iii) கல்வியில் பெரியவர் | இ. தமிழழகனார் |
| (iv) சந்தக்கவிமணி | ஈ. பாரதியார் |
| (v) சதாவதானி | உ. பெருஞ்சித்திரனார் |

40. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

பொதிந்திருக்கும் மலர்க பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள்; ஆல மலர்; பலா மலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்; சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயேள்; அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை ஊமத்தம், கள்ளி, முருங்கை.

SHRI KRISHNA ACADEMY


இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும் மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

- கோவை இளஞ்சேரன்

**வினாக்கள்**

1. மலா் உண்டு: பெயரும் உண்டு- இரண்டு தொடா்களையும் ஒரு தொடராக்குக.
2. அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயா்களையும், பயன்களையும் எழுதுக.
4. அரிய மலா் - இலக்கணம் குறிப்புத் தருக.
5. மூங்கில் அரிசி எவ்வாறு தோன்றும்?

41. **படம் உணா்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடா்களில் குறிப்பிடுக.**



42. சிறுதாம்பு - எனத் தொடங்கும் முல்லைப்பாட்டின் மனப்பாடப் பகுதியை எழுதுக.

## பகுதி - IV

## மதிப்பெண்கள் : 16

**விரிவாக விடையளிக்க** **2x8=16**

43. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

SHRI KRISHNA ACADEMY

44. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.


# SHRI KRISHNA ACADEMY

- **QUESTION BANK AND MINIMUM MATERIALS for ALL SUBJECTS AVAILABLE FOR X,XI,XII.**
- **CREATIVE QUESTIONS , STUDY MATERIALS(TOPPER GUIDE), FULL TEST QUESTION PAPERS ,ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.**

→ **For MORE DETAILS - 99655 31727 , 99768 73243**

SHRI KRISHNA ACADEMY